அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறது. மேற்படி அந்தத் திட்டத்தை கிராமப் பகுதியிலே படித்திருக்கின்ற இளைஞர்கள், ஆண்கள், பெண்கள் இவர்கள் எல்லாம் அரசுக்கு விண்ணப்பம் போட்டு வேலை தேடி அலைகின்ற இந்த இளைஞர்களுக்கு ஒருங்கிணைந்த கிராமப் பகுதியிலே எல்லாம் பயிற்சி அளித்து அவர்களுக்கு கடன் உதவி வழங்குகின்ற அந்த விதிமுறைகளைத் தளர்த்தி, அவர்களுக்கு வழங்குகின்ற அந்தக் கடனை அதிகப்படுத்தித் தர அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்புப் பிரிவைப் பொறுத்தவரை தொழில் நுட்பப் பயிற்சி சான்றிதழ் பெற்ற நபர்கள் சுய தொழில் துவங்க ஒரு திட்டம் செயல்படுத்தப்பட்டு 6 மாவட்டங்களில் (கோயம்புத்தூர், திருச்சி, சேலம், மதுரை, தென்னாற்காடு மற்றும் வடாற்காடு—அம்பேத்கார்) 1987-88 முதல் அமல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தில் அதிகபட்சமாக 10,000 ரூபாய் தான் கடன் வழங்கப்படுகிறது. ஆனால் இப்பொழுது மாவட்ட தொழில் மையங்களில் சுய வேலைவாய்ப்பு திட்டங்களில் 35,000 ரூபாய் கடன் வழங்கப்படுவதாலும் எனவே இதிலே குறைவான மனுக்கள் வருகின்ற காரணத்தினாலே இந்த 6 மாவட்டங்களில் இந்தத் திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. மற்ற மாவட்டங்களிலும் கிராமப்புறங்களிலும் இருப்பவர்கள் மாவட்ட தொழில் மையம் மூலம் கடன் பெற்று வருகின்றார்கள் என்பதையும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : செல்வி கோ. மல்லிகா.

செல்வி கோ. மல்லிகா : பேரவைத் தலைவர் அவர்களே, மின்னணுவியல் துறையில் பயிற்சி பெற்றவர்கள் கிராமங்களில் குடிசைத் தொழிலாக டிரான்ஸிஸ்டர் அசெம்பிளிங் அமைக்க அரசு கடன் உதவி அளிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட தொழில் மையங்களின் மூலமாக இதற்கு கடன் உதவி கேட்டு மனு செய்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 233. திரு. மா. சுந்தரதாஸ், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

233—

விளவங்கோடு தாலுக்காவிலுள்ள விவசாயிகளுக்கு நிதியுதவி.

*521 திரு. மா. சுந்தரதாஸ் :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

1992 மார்ச் 16]

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவங்கோடு தாலுக்காவில் சூறாவளிக் காற்றினாலும், மழையினாலும், பல இலட்சம் ரூபாய் மதிப்புள்ள வாழைகள் நாசமானது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அந்த விவசாயிகளுக்கு நிதியுதவி செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

விவர அறிக்கை.

கன்னியாகுமரி மாவட்டத்தில் காற்றினாலும், மழையினாலும் பாதிக்கப்பட்ட வாழை விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்க அரசாணை நிலை எண் 1144, வருவாய்த்துறை, நாள் 20–8–1991-ல் ரூ. 50,000 (ரூபாய் ஐம்பதாயிரம்) ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. வாழைப் பயிர்களுக்கென ஒதுக்கப்பட்ட ரூ. 50,000 பாதிக்கப்பட்ட வாழைப்பயிர் விவசாயிக்கு வழங்கினால் மிகக் குறைந்த அளவுதான் வழங்க முடியும் என்றும், அதனால் பாதிக்கப்பட்ட விவசாயிக்கு எந்த நன்மையும் இல்லை என்றும், எனவே மேற்கூறிய ரூ. 50,000 தொகையை கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்கனவே பாதிக்கப்பட்ட நெற்பயிர் விவசாயிகளுக்கு மானிய விலையில் கீழ்க்குறிப்பிட்டவாறு, விதை நேர்த்தி மருந்து, அஸோஸ்பைரில்லம் மற்றும் இரசாயன உரங்கள் ஆகியவற்றை வழங்குவதற்கு ஒப்புதல் அளிக்குமாறு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அரசை கோரினார்.

வரிசை எண்ணும் இடுபொருளின் பெயரும்.	தேவையான அளவு.	மொத்த விலை.	மானியத் தொகை.
(1)	(2)	(3)	(4)
		(ரூபாயில்).	
1. விதை நேர்த்தி மருந்து (50 சதவீத மானியம்)	37,950 (கிலோகிராம்)	11,385.00	5,692.50
2. அஸோஸ்பைரில்லம் (50 சதவீத மானியம்)	7,595 பாக்கெட்டுகள்.	22,785.00	11,392.50
3. இரசாயன உரங்கள் (20 சதவீத மானியம்)	115,425 மெ.டன்.	1,83,525.75	32,915.00
		2,17,695.75	50,000.00

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வி விளவங்கோடு தாலுக்காவில் கேட்டேன். மாவட்ட ரீதியான அளவிலே ஒரு அறிக்கை வைக்கப்பட்டுள்ளது. அதில் 50,000 ரூபாய் வரை கொடுத்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும், வாழை என்று சொன்னால் ஏத்தவாழை என்று எங்கள் பகுதியிலே சொல்வார்கள். அதைப் பயிரிட்டு எக்ஸ்போர்ட் செய்கிறோம். திருவனந்தபுரம் ஏர்ப்போர்ட் மூலமாக சௌதி போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். போன ஆண்டிலே ஏகப்பட்ட நஷ்டங்கள் வந்தன. 50,000 என்று சொன்னால் ஒரு நபருக்கு வந்த நஷ்டத்தைக் கூட ஈடுகட்ட முடியாத அளவிலே நஷ்டம் வந்திருக்கிறது. அது போதாது. ஆகையினால் அதிகமாக பணம் ஒதுக்கிக் கொடுக்க முடியுமா என்றும் மேலும் இந்த விவசாயிகளுக்கு பயிர் இன்ஷூரன்ஸ் செய்வதற்கு திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழை சாகுபடி என்பது பணப் பயிர். வெள்ளத்தாலும், புயல் காற்றாலும், சூறாவளிக் காற்றாலும் வாழைப் பயிர்கள் சேதம் அடைந்து வருகின்றன. அந்தப் பயிர்களுக்கு அரசாங்கம் நஷ்ட ஈடு கொடுப்பது என்பது இயலாத காரியம். எனவே காப்பீட்டுக் கழகத்தின் வாயிலாக பயிர் இன்ஷூரன்ஸ் செய்யப்பட்டு அதற்கு வேண்டிய தொகை அவருக்கு கிடைக்கக்கூடிய வகையிலே அரசு ஆவன செய்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விடைக்கு நன்றி. எங்களுடைய மாவட்டத்திலே இதுவரையிலும் பயிர் இன்ஷூரன்ஸ் செய்கின்ற திட்டத்தை அமலுக்கு கொண்டு வரவில்லை. ஆகையினால் இனியாவது உடனடியாகப் பயிர் இன்ஷூரன்ஸ் செய்வதற்கான குறிப்பாக ஏத்தவாழை பயிருக்கு இன்ஷூரன்ஸ் செய்யும் திட்டத்தை அமல்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயிர் இன்ஷூரன்ஸ் சில பகுதிகளிலே மட்டும்தான் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அது தமிழகம் முழுவதும் செயல்படுவதற்கு அரசு முயற்சியை மேற்கொண்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 234. திரு. சோ. இராசாராமன், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்.